கூடுதல் மாவட்ட (விரைவு) நீதிமன்றம், கும்பகோணம்

முன்னிலை. திருமதி. T. ஜெயஸ்ரீ,M.L.,

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (விரைவு நீதிமன்றம்), கும்பகோணம்

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 04ஆம் நாள் செவ்வாய்கிழமை

இ.ம.எண். 03/2026 ல் அ.வ.எண்.26/2021

சார்பதிவாளர் திருவிடைமருதுார், .... மனுதாரர்/ 4ம் பிரதிவாதி

/எதிர்/

1. வினோதா ... வாதி
2. முருகன்
3. குமார்
4. கலையரசன்
5. மாவட்ட ஆட்சியர் தஞ்சாவூர் ......எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 03.08.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து, மனுதாரர்/4ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. கே. அசோகன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. எஸ். ராஜசேகரன் அவர்கள்முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் திரு. எம்.பி. மனோகரன் அவர்கள் முன்னிலையாகியும், ஆவணங்கள் மற்றும் இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 9 விதி 7ன் கீழ் மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்/4-ம் பிரதிவாதியால் அசல் வழக்கு எண்.26/2021ல் கடந்த 07.10.2021 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதரப்பு உத்தரவை ரத்து செய்ய கோரி, தாக்கல் செய்யப்பட்டுள்ளது .

**2)** மனுதாரர் தன் பிரமாண பத்திரத்தில் அசல் வழக்கில் 4ம் பிரதிவாதி என்றும், மேற்படி வழக்கில் தனக்காவும் 5-ம் பிரதிவாதிக்கும் சேர்த்து இந்த மனுவை தாக்கல் செய்வதாகவும், எதிர்மனுதாரர்/வாதி பாகப் பிரிவினைப் பத்திரம் (Partition Deed) செல்லாது மற்றும் சட்டப்படி அமலற்றது என்று அறிவிக்கவும், அதனுடன் தொடர்புடைய பிற நிவாரணங்களை வழங்கவும் கோரி, 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது அசல் வழக்கு தாக்கல் செய்து அசல் வழக்கில் 07.10.2021 அன்று வழக்கு விசாரணைக்கு பட்டியலிடப்பட்டிருந்த நிலையில், சம்மன் கிடைத்திருந்தாலும், அச்சமயம் அரசுத் தரப்பு வழக்கறிஞர் காலமானதால், வழக்கு ஆவணங்கள் தவறுதலாக இடம் மாறியதும், சம்பந்தப்பட்ட அலுவலர்



JAYASHREE THOMAS

Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.08.04 19:12:13 +0530

விவரங்களை ஒப்படைக்காமல் பணியிட மாற்றம் செய்யப்பட்டதும் காரணமாக பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை. இதனால், 07.10.2021 அன்று 4 மற்றும் 5–வது பிரதிவாதிகள் தவறுகைகாக வழக்கில் ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், பின்னர் ஆவணங்கள் கிடைத்ததும், தற்போது கூடுதல் அரசுத் தரப்பு வழக்கறிஞர் வழக்கை ஆய்வு செய்தபோது, Memo of Appearance மற்றும் வழக்கொதிருரை தாக்கல் செய்யப்படாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதும் தெரியவந்ததாகவும், அவை தற்போது இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், சமூகம் நீதிமன்றத்தில் 07.10.2021 தேதியன்று மேற்படி வழக்கில் எதிருரை தாக்கல் செய்யாததற்கு மேலே சொன்ன காரணங்களேயின்றி வேண்டுமென்றோ, அல்லது தன் அலட்சியத்தினாலோ ஏற்படவில்லை என்றும், இந்த மனுவை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்/வாதி யாதொரு கஷ்ட, நஷ்டமும் ஏற்பட போவதில்லை, இந்த மனுவை அனுமதிக்காது போகும் பட்சத்தில் யாதொரு தனக்கு பெருத்த கஷ்ட, நஷ்ட ஏற்படும், ஆதலால் கடந்த 07.10.2021 தேதியன்று தங்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட எக்ஸ் பார்ட்டி உத்தரவை ரத்து செய்து இதனுடன் தாக்கல் செய்யப்படும் வழக்கெதிருரை ஏற்றுக் கொண்டு மேற்படி வழக்கை மேல்நடத்த உத்தரவு வழங்குமாறும் மனுதாரர்/4, 5 பிரதிவாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 1–ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்.**

மனுதாரர்களின் மனு சட்டப்படி செல்லாதது, எனவே தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், அபிடவிட் தாக்கல் செய்த அரசு அதிகாரி, தனது பதவியை நிரூபிக்கும் ஆதாரத்தை தாக்கல் செய்யவில்லை என்றும், அரசு வழக்கறிஞர் இறந்ததால் ஆஜராக முடியவில்லை என்ற காரணம் ஏற்கத்தக்கதல்ல, இது அரசு அதிகாரிகளின் அலட்சியத்தை காட்டுகிறது என்றும், 4 மற்றும் 5–வது பிரதிவாதிகள் சுமார் ஐந்து ஆண்டுகள் தாமதமாக, வழக்கை இழுத்தடிக்கும் நோக்கில் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கின் பரிகாரம் பற்றிய அடிப்படை விவரம்கூட தெரியாமல் அபிடவிட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எக்ஸ்பார்ட்டி உத்தரவுக்கு 30 நாட்களுக்குள் மனு தாக்கல் செய்யாமல், ஐந்து ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்துள்ளதாலும், அசல் வழக்கில் வாதியை குறுக்குவிசாரணை செய்யும் நிலையில் உள்ளதாலும், மேற்படி ஒருதரப்பு உத்தரவை ரத்து செய்ய மனுவில் கோரப்பட்டுள்ளது என்றும் மேற்படி காரணம் உண்மையானதல்ல என்றும் எனவே இந்த எதிர்மனுதாரரின்/வாதியின் கட்சியை ஏற்றுக் கொண்டு மனுவினை இந்த எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், கோரப்பட்டுள்ளது.



JAYASHREE THOMAS

Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.08.04 19:12:18 +0530

4) இம்மனுவில் தீர்வு காண வேண்டிய எழு வினா யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. அசல் வழக்கானது தொகை பாகப் பிரிவினைப் பத்திரம் (Partition Deed) செல்லாது மற்றும் சட்டப்படி அமலற்றது என்று அறிவிக்கவும், அதனுடன் தொடர்புடைய பிற நிவாரணங்களை வழங்கவும் கோரி, எதிர்மனுதாரர் / வாதியால் இந்த மனுதாரர் / பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு அதில் பிரதிவாதிகள் ஆஜராகுவதற்காக விசாரணைக்கு பட்டியலில் போடப்பட்ட நிலையில், இம்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பதாலும் கடந்த 07.10.2021 அன்று ஒருதரப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பின்னிட்டு வாதியை குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்ட நிலையில், மனுதாரர் மேற்படி ஒருதரப்பு உத்தரவை ரத்து செய்ய கோரி இம்மனுவை தாக்கல் செய்து, சம்மன் கிடைத்திருந்தாலும், அச்சமயம் அரசுத் தரப்பு வழக்கறிஞர் காலமானதால், வழக்கு ஆவணங்கள் தவறுதலாக இடம் மாறியதும், சம்பந்தப்பட்ட அலுவலர் விவரங்களை ஒப்படைக்காமல் பணியிட மாற்றம் செய்யப்பட்டதும் காரணமாக பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை என்றும், அசல் வழக்கில் தனக்கு நல்ல கட்சி உள்ளதாகவும் அதனை இத்துடன் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தெளிவுபடுத்தி உள்ளதாகவும், தனது கட்சியை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டி மனுவை அனுமதிக்க வேண்டுமென கோரி உள்ளார். மாறாக எதிர்மனுதாரர் / வாதி தரப்பில், மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்க கூடியதல்ல என்றும் வேண்டுமென்றே காலம் கடத்த வேண்டி மனுதாரர் அசல் வழக்கினை ஒருதரப்பிற்கு விட்டுவிட்டு தற்போது இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கோரப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு ஒரு வாய்ப்பு அளிப்பதே இயற்கை நீதி ஆகும். அந்த வகையில் கடந்த 07.10.2021 அன்று மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதரப்பு உத்தரவை ரத்து செய்ய இம்மனுவை மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதை கருத்தில் கொண்டும், இம்மனுவுடன் அசல் வழக்கின் எதிர்வழக்குரையையும், ஆஜர் மெமோவையும், தாக்கல் செய்துள்ளதை கருத்தில் கொண்டும், எதிர்தரப்பில் மனுவை அனுமதிக்க கடும் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்பதை பரிசீலித்தும், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு ஒரு வாய்ப்பு அளிப்பதே இயற்கை நியதி என்பதன் அடிப்படையில் இந்த மனுவை நீதியின் நலன் கருதி அனுமதித்து உத்தரவிட இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

JAYASHREE THOMAS

Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.08.04 19:12:23 +0530

முடிவில், இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு இன்று 2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4–ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறிய என்னால் பகரப்பட்டது.

JAYASHREE THOMAS

Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.08.04 19:12:29 +0530

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
(விரைவுநீதிமன்றம்), கும்பகோணம்.